**ஆண் :** ம்ம் முன்பு ஒரு காலத்துல
முருக மல காட்டுக்குள்ள
முன்பு ஒரு காலத்துல
முருக மல காட்டுக்குள்ள
தந்திரம் மிகுந்த நரி வாழ்ந்து வந்தது
அது காடு விட்டு நாடு தேடி ஓடி வந்தது
என்ன பன்னிச்சு

**பெண் :** ஓடி வந்திச்சி

**ஆண் :** ம்ம் ஓடி வந்த குள்ள நரி

**பெண் :** ஹையையோ ஹையையோ

**ஆண் :** கால் தவரி வீழ்ந்ததடி
ஓடி வந்த குள்ள நரி
கால் தவரி வீழ்ந்ததடி
நீல நிற சாயம் வெச்ச
தொட்டி ஒன்றிலே
அது நிறம் மாறி போனதடி
சின்ன பொம்பல

**பெண் :** ஹ ஹ ஹ ஹ ஹ ஹ

**ஆண் :** நரி கலர் மாறி போச்சு
பிறகு காடு தேடி போச்சு
நரி

**பெண் :** காடு மாறி போச்சு

**ஆண் :** ஐயோ அப்புறம்

**பெண் :** கலர் தேடி போச்சு
ஹா ஹா ஹா

**ஆண் :** கெட்டுது போ
கதையே மாத்திபுட்டே
அய்ய என்ன இரு இரு இரு இரு
இன்னும் கதை இருக்கு
வாடா வா தலை எல்லாம்
சரி சொல்லு கதை எங்க விட்டேன்

**பெண் :** ம்ம்..நரி காடு தேடி போச்சு

**ஆண் :** காடு தேடி போச்சா

**ஆண் :** நரி கலர் மாறி
காட்டுக்குள்ளே போச்சா

**பெண் :** ஹான்...

**ஆண் :** மத்த மிருகம் எல்லாம்
என்னடா இது
புதுசா ஒரு மிருகம் வந்திருக்குதே
அப்படின்னு பாத்து பயந்து போச்சு

**பெண் :** ஐயையோ

**ஆண் :** ஹஹஹ நான் ஆண்டவன்
அனுப்பிய புருஷன்
ஹஹஹ ஹஹஹ
உங்களை ஆள வந்திருக்கும் அரசன்

**ஆண் :** மிருகங்கள் எல்லாம் பயந்தது
அங்கு நரியின் ராஜ்ஜியம் நடந்தது
ஒரு நாள் மேகம் இடித்தது
மின்னல் வெடித்தது காற்று அடித்தது
காடு துடித்தது நிலம் அசைந்தது
மழை பொழிந்தது....ஆஆஆஆ

**பெண் :** ஆஆஆஆ.....

**ஆண் :** காடு விலங்குகள் கலங்கின
கொஞ்சம் பயந்தன
உடல் நடுங்கின ஆவி ஒடுங்கின
நீல நரியின் வாசல் வந்து
ஓலம் இட்டு அழுதன.....

**ஆண் :** உஉஉ...ஆஆஆ.....
ஏய் நீ ஏன் அழுகுற

**பெண் :** நீ ஏன் அழுத

**ஆண் :** நான் புலி சிங்கம் முயல்
அது மாதிரி அழுதேன்

நீ ஏன் அழுகுற
**பெண் :** அப்போ சரி ஹ்ம்ம்..சொல்லு

**ஆண் :** நரியும் வெளியே வந்தது
மழையில் கொஞ்சம் நனைந்தது
நீல சாயம் கரைஞ்சது
நரியின் வேஷம் கலைஞ்சது
**பெண் :** ஹஹஹ ஹஹஹ

**ஆண் :** நீல சாயம் வெளுத்து போச்சு
**பெண் :** டும் டும் டும் டும்
**ஆண் :** ராஜா வேஷம் கலைஞ்சு போச்சு
**பெண் :** டும் டும் டும் டும்

**ஆண் :** ஹான் நீல சாயம் என்ன ஆச்சு
**பெண் :** ம்ம் நீல சாயம் வெளுத்து போச்சு
**ஆண் :** நீல சாயம் வெளுத்து போச்சு
**பெண் :** டும் டும் டும் டும்
**ஆண் :** ராஜா வேஷம் கலைஞ்சு போச்சு
**பெண் :** டும் டும் டும் டும்

**ஆண் :** ஹான் நீல சாயம் வெளுத்து போச்சு
**பெண் :** டும் டும் டும் டும்
**ஆண் :** ராஜா வேஷம் கலைஞ்சு போச்சு
டும் டும் டும் டும்
காட்ட விட்டே ஓடி போச்சு
டும் டும் டும் டும்
டும் டும் டும் டும்
டும் டும் டும் டும்
**பெண் :** ஹஹஹஹஹா